# பாகோடு முதல்நிலை பேரூராட்சி

## கன்னியாகுமரி மாவட்டம்

ந.க.எண்.133/2022/அ1

நாள் : 24.06.2022

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கன்னியாகுமரி மாவட்டம், பாகோடு முதல்நிலை பேரூராட்சியில் 2022–2023 –ஆம் ஆண்டு கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டத்தில் மின்கலன் (Battery Operated Vehicle) மூலம் இயங்கும் வாகனம் மற்றும் இலகு ரக வாகனம் (LCV) கொள்முதல் செய்திட தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்க்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 12.07.2022–ஆம் தேதி செவ்வாய்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 11.07.2022 – ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 5.00 மணி வரை அதற்குரிய தொகையை கீழ்க்கண்டுள்ள விவரப்படி பாகோடு முதல்நிலை பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி (வரி உட்பட) பெற்றுக்கொள்ளலாம் .

ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும் திறப்பு தேதி மற்றும் நேர விவரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளியுடன் பணிக்கான வைப்புதொகையினை Executive Officer, Pacode Town Panchayat என்ற பெயரில் வங்கி வரைவோலையாக எடுத்து இணைத்து அனுப்ப வேண்டும்.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை 13.07.2022 – ஆம் தேதி புதன்கிழமை செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும்.

| வ. எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | வைப்பு தொகை | ஒப்பந்தப்புள்ளி படிவ கட்டணம் | பணி முடிக்க வேண்டிய கால அளவு |
|---|---|---|---|---|---|
| 1 | மின்கலன் (Lead Acid Battery) மூலம் இயங்கும் வாகனங்கள் 13 எண்ணம் கொள்முதல் செய்தல். | 20.15 | 20150.00 | 6760.00 | 30 நாட்கள் |
| 2. | இலகுரக வாகனம் LCV -1 வாகனம் | 7.36 | 7360.00 | 1580.00 | 30 நாட்கள் |

## நிபந்தனைகள்

1. மின்கலன் மூலம் (Battery Operated Vehicle) இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்திட அமைக்கப்பட்ட துணைக்குழுவில் மின் கலன் (Lead Acid Battery) மூலம் இயங்கும் வாகனத்திற்கு விவரக் குறிப்புகளின் படி (Specification) வாகனங்கள் இருக்க வேண்டும். மேலும், மின்கலன் (Lead Acid Battery) வாகனத்திற்கு ஒரு வண்டியின் அடிப்படை விலை G.S.T (5 சதவீதம்) நீங்கலாக ரூ. 1.55 இலட்சம் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், இந்த விலைக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட வேண்டும்.
2. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 இன் படி ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்படும்.
3. ஒப்பந்தப்புள்ளி தகுதி அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் கொள்முதல் ஆணை வழங்கிய மூன்று தினங்களுக்குள் ரூ.100/– மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கப்பட வேண்டும்.
4. மின்கலன் மூலம் (Battery Operated Vehicle) இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்தவுடன் செயற்பொறியாளரால் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு துணைக்குழு அனுமதி வழங்கியுள்ள விவரக் குறிப்புகள் படி (Specification) இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்தவுடன் செயற்பொறியாளரால் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு, துணைக்குழு அனுமதி வழங்கியுள்ள விவரக் குறிப்புகள் (Specification) மற்றும் விலை விகிதம் (Rate) அடிப்படையில் பரிசீலனை செய்து தகுதிச்சான்றிதழ் அளித்த பின்னரே சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உரிய விதிமுறைகளின் படி பட்டியல் தொகை வழங்கப்படும்.
5. உரிய காலத்திற்குள் வாகனங்கள் விநியோகம் செய்ய தவறினால் செலுத்தப்பட்டிருக்கும் வைப்புதொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.
6. வாகனங்கள் விநியோகம் செய்யப்பட்ட ஓராண்டு காலத்திற்கு வாகனத்தில் ஏற்படும் குறைபாடுகளை சம்மந்தப்பட்ட நிறுவனத்தாரே தனது சொந்த செலவில் சீரமைக்கும் வகையில் நிபந்தனைகள் ஒப்பந்த பத்திரத்தில் இடம் பெற வேண்டும்.
7. ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் ஒப்பந்தப்புள்ளிகளுடன் சென்ற ஆண்டு முடிய வருமானவரி மற்றும் சரக்கு சேவை வரி செலுத்திய சான்றினை இணைத்தல் வேண்டும்.
8. ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் நிறுவனங்கள் சம்மந்தப்பட்ட பணிக்கு மூன்றாண்டுகளுக்கு குறையாமல் முன் அனுபவம் உள்ளதற்கான ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்.
9. ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கப்படும் போது விற்பனை வரி துறையில் பதிவு பெற்றுள்ளதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.
10. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது. பேரூராட்சி மன்ற ஒப்புதலுக்கு பிறகு கொள்முதல் ஆணை வழங்கப்படும். பணி ஆணை வழங்கப்படும் போது கூடுதல் 1% வைப்புதொகை செலுத்தப்பட வேண்டும்.
11. கொள்முதல் செய்யப்பட்ட வாகனங்களுக்கு பட்டியல் தொகை வழங்கப்படும் போது வேலை முடிவு இறுதி பட்டியலில் 4 % காப்பு தொகை, 1% வருமான வரி, 2% சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் 1 % தொழிலாளர் நலநிதியும் பிடித்தம் செய்யப்படும்.
12. அடித்தல், திருத்தல் இன்றி முறையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் வைப்புதொகை இன்றி அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கை ஏதும் இன்றி தள்ளுபடி செய்யப்படும்.

13. செலுத்தப்படும் வைப்புத்தொகை தணிக்கை முடிந்து, தணிக்கை அறிக்கையில் தடையேதும் இல்லாத பட்சத்தில் திருப்பி வழங்கப்படும்.
14. ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் https://www.tenders.tn.gov.in என்ற இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவிறக்கம் செய்து ஒப்பந்தப்புள்ளி அளிக்கலாம்.
15. இதர நிபந்தனைகள் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

24/6/22

செயல் அலுவலர்,
பாகோடு முதல்நிலை பேரூராட்சி.

பெறுநர்

1. பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்
2. அலுவலக அறிவிப்பு பலகைக்கு

<u>நகல்கள்:</u>

1. அலுவலக விளம்பர பலகை.
2. மாவட்ட ஆட்சித் தலைவர் கன்னியாகுமரி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.
3. உதவி இயக்குநர், நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகள் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.
4. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள் கன்னியாகுமரி மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
5. துணை கண்காணிப்பாளர் ஊழல் மற்றும் லஞ்சஒழிப்புதுறை, கன்னியாகுமரி மாவட்டம்.
6. இளநிலை பொறியாளர், களியக்காவிளை பேரூராட்சி.
7. சம்பந்தப்பட்ட கோப்பு.